செய்தி வெளியீடு எண். 73-2017 நாள்: 24.09.2017

# விழுப்புரம் மாவட்டம் சமூக நலத்துறை சார்பாக திருமண நிதியுதவி திட்டத்தின்கீழ் 2500 பயனாளிகளுக்கு ரூ.8.85 கோடி நிதியுதவி மற்றும் தாலிக்கு 8 கிராம் தங்கம் வீதம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் 20 கிலோ தங்கத்தினை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.

******

விழுப்புரம் சுமங்கலி மஹாலில் சமூக நலத்துறை சார்பாக திருமண நிதியுதவி திட்டத்தின்கீழ் 2500 பயனாளிகளுக்கு ரூ.8,85,00,000/- நிதியுதவி மற்றும் தாலிக்கு 8 கிராம் தங்கம் வீதம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் 20 கிலோ தங்கம் என மொத்தம் ரூ.13,85,00,000/- மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இன்று (24.09.2017) வழங்கினார்.

திருமணத்திற்கான நிதியுதவி மற்றும் தாலிக்கு 8 கிராம் தங்கம் வழங்கி மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் விழாப்பேருரையாற்றினார்.

மாண்புமிகு மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களால் திருமண நிதியுதவி திட்டமானது, தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டமாக 17.05.2011 முதல் விரிவுபடுத்தப்பட்டது. பட்டம் /பட்டயம் படித்த பெண்களுக்கு ரூ.50,000/-மும் 4 கிராம் தங்க நாணயமும், பத்தாம் /பன்னிரெண்டாம் வகுப்பு படித்த பெண்களுக்கு ரூ.25,000/-மும் 4 கிராம் தங்க நாணயமும் வழங்கப்பட்டது.

மாண்புமிகு மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் 2016 தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடி, தமிழக முதலமைச்சராக மீண்டும் பதவியேற்றவுடன் முதல் கையெழுத்தாக திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 4 கிராம் தங்க நாணயம் 8 கிராம் தங்க நாணயமாக விரிவுபடுத்தி 23.05.2016 அன்று ஆணையிட்டார்கள். இவ்வாணையின்படி, பட்டம்/பட்டயம் படித்த பெண்களுக்கு ரூ.50,000/-மும் 8 கிராம் தங்க நாணயமும், பத்தாம்/பன்னிரெண்டாம் வகுப்பு படித்த பெண்களுக்கு ரூ.25,000/-மும் 8 கிராம் தங்க நாணயமும் வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, முதல் தவணையாக ஏழை பெண்கள் திருமண நிதி உதவி திட்டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் 2017-2018ஆம் நிதியாண்டில் பட்டம்/பட்டயம் படித்த 150 பெண்களுக்கு ரூ.50,000/-மும் 8 கிராம் தங்க நாணயமும், பத்தாம்/பன்னிரெண்டாம் வகுப்பு படித்த 350 பெண்களுக்கு ரூ.25,000/-மும் 8 கிராம் தங்க நாணயமும் என மொத்தம் 500 நபர்களுக்கு ரூ.1,62,50,000/- நிதியுதவி மற்றும் 4 கிலோ தங்கமும் வழங்கப்பட்டது.

தற்போது இரண்டாம் தவணையாக ஏழை பெண்கள் திருமண நிதி உதவி திட்டத்தின் கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் பட்டம்/பட்டயம் படித்தவர்கள் 1040 நபர்களுக்கு 8 கிராம் தங்க நாணயம் மற்றும் ரூ.50,000/- தொகையும், பத்தாம்/பன்னிரெண்டாம் வகுப்பு படித்தவர்கள் 1460

நபர்களுக்கு 8 கிராம் தங்கம் மற்றும் ரூ.25,000/- தொகையும், என மொத்தம் 2500 நபர்களுக்கு ரூ.8,85,00,000/- மற்றும் ரூ.5,00,00,000/- மதிப்பிலான 20 கிலோ தங்கமும் இன்றைய தினம் வழங்கப்பட்டுள்ளது.

மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்திய அரசு மாண்புமிகு மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு. அம்மா அவர்கள் பெண்கள் பாதுகாப்புடனும் அச்சமின்றி சமுதாயத்தில் தலை நிமிர்ந்து நிர்க்க வேண்டும் என்பதற்காகவும், பெண் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகவும் தொலைநோக்குப் பார்வையுடன் பல சிறப்பு திட்டங்களை கொண்டுவந்தார்கள். இச்சமுதாயத்தில் பெண்கள், ஆண்களுக்கு நிகராக திகழ இதுபோன்ற திட்டங்கள் உதவியாக உள்ளது.

மாண்புமிகு மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்கள் பெண் சிசுக்கொலையை தடுப்பதற்காக 1993ஆம் ஆண்டு தொட்டில் குழந்தை திட்டத்தை கொண்டுவந்தார்கள். இத்திட்டத்தின் கீழ், பெண்குழந்தைகளை அரசே வளர்த்து, படிக்க வைத்து தற்போது மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும் மற்றும் பல்வேறு துறையில் பெண்கள் உயர்ந்த நிலையை அடைய இவ்வரசு வழிவகை செய்துள்ளது. மேலும், நகர மக்களுக்கு நிகராக கிராமப் பெண்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்கள். மேலும், வேலைக்கு செல்லும் மகளிருக்கு மோட்டார் வாகனம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில், விலையில்லா மடிக்கணினி, விலையில்லா மிதிவண்டி, விலையில்லா நோட்டு புத்தகம், விலையில்லா சீருடை மற்றும் பல்வேறு திட்டங்களை கொண்டுவந்தார்கள். மேலும், இன்றைய தினம் 1040 பட்டம் மற்றும் பட்டயம் பெற்ற பெண்களுக்கு தாலிக்கு தங்கம் வழங்கப்படுகிறது. பெண் கல்வியில் உயர்ந்துள்ளதை இந்நிலை எடுத்துக்காட்டுகிறது என்பதை தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். மேலும், விழுப்புரம் மாவட்டத்தில் அரசு சட்டக்கல்லூரி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, இந்த ஆண்டே சேர்க்கை நடைபெற்றுள்ளது. இதுவே இவ்வரசு விரைவாக செயல்படுகிறது என்பதற்கான ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது என மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.பிரியா, விழுப்புரம் பாராளுமன்ற உறுப்பினர் திரு.சு.இராஜேந்திரன், ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் திரு.செஞ்சிசேவல் வெ.ஏழுமலை, கள்ளக்குறிச்சி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர்.க.காமராஜ், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா.குமரகுரு, வானூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.சக்ரபாணி, கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.பிரபு, மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.எஸ்.கே.லலிதா, விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.சரஸ்வதி மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.